பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 82 நாள் 25.06.2019

**சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.947.35 கோடி மதிப்பீட்டில் 40 திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

சீர்மிகு நகரத் திட்டம் ஜூன் 25 ஆம் நாள் 2015 அன்று மத்திய அரசு துவக்கியது. 5 வருட காலத்தில் இந்தியா முழுவதிலும் இருந்து 100 நகரங்களை சீர்மிகு நகரங்களாக உருவாக்க மத்திய அரசு தெரிவு செய்தது. அதில் மத்திய அரசு, தமிழகத்திற்கு 11 சீர்மிகு நகரங்களை அறிவித்தன. உலகத்தரம் வாய்ந்த நகரங்களை மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் தேவைகளுக்கேற்ப உருவாக்குவதே சீர்மிகு நகரத்திட்டத்தின் நோக்கமாகும்.

முதலாம் சுற்றில், மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் சீர்மிகு நகரமாக தேர்தெடுக்கப்பட்ட 20 நகரங்களில் ஒன்றாக சென்னை மாநகரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சீர்மிகு நகர திட்டத்தை செயல்படுத்த "சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட்" என்ற சிறப்பு நிறுவனம் தமிழக அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து நிறுவப்பட்டுள்ளது.

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் 40 திட்டப்பணிகள் ரூ.947.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை ரூ.25.73 கோடி மதிப்பீட்டில் 9 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, இதில் முக்கியமாக சென்னை மாநகர மக்கள் புகார்கள் தெரிவிப்பதை எளிதாக்கும் வகையில் 'நம்ம சென்னை" என்ற கைபேசி செயலி உருவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 28 பள்ளிகளில் மின்னணு வளவகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளது. 8 பூங்காக்கள் மறுவடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாற்றுதிறனாளிகளுக்கான உணர்வு பூங்கா, போக்குவரத்து குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகளை விளக்கும் பூங்கா, கோபதி நாராயணா சாலையில் உள்ள மேம்பாலத் தூண்களை சுற்றி தோட்டம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, 22 திட்டங்கள் ரூ.491.86 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளது. 4 திட்டங்கள் ரூ.191.90 கோடி மதிப்பீட்டில் ஒப்பம் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மேலும், இதரப்பணிகள் செயல்படுத்த பல்வேறு கட்டங்களில் உள்ளது.

ஆளில்லா வானூர்தி மூலம் அனைத்து கட்டடங்கள், சாலைகளில் மேற்பரப்பில் அமைந்துள்ள அனைத்து துறைகளின் சேவை பயன்பாட்டுப் பொருட்களை புவிசார் தகவல் அமைப்பு (GIS) உதவியுடன் வரைபடமாக தயாரிக்கும் பணி, தியாகராயா சாலை மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பில் பலஅடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணி, 54 நீர் நிலைகள்

மற்றும் 15 குளங்களை மேம்படுத்தும் பணி, வில்லிவாக்கம் ஏரியை புனரமைக்கும் பணி, தியாகராயா சாலையில் நடைபாதை வளாகம் அமைக்கும் பணி, பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடங்களில் சூரிய மின் உற்பத்தி அமைப்பு நிறுவும் பணி, வாகன நிறுத்தம் மேலாண்மை பணி, மிதிவண்டி பகிர்மானப்பணி ஆகியவை சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்களாகும். பெருநகர சென்னை மாநகராட்சி சீர்மிகு நகர திட்டத்திற்கு மத்திய அரசு தன் பங்காக ரூ.196 கோடியும், மாநில அரசு மத்திய அரசுக்கு இணையான தொகையை விடுவித்துள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**